சி.ஆர்.எம்.பி. 2507/2022

திரு.கோவிந்தன் , த.பெ.அய்யனார்

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 24.3.2023

**சத்திய பிரமாண வாக்குமூலம் –**

நான் திருவில்லிபுத்தூரில் கீழப்பட்டி பிள்ளையார் கோவில் தெருவில் குடியிருந்து நெசவு தொழில் செய்து வருகிறேன். நெசவாளர் சமுதாய மக்களின் படிப்பிற்காக எங்களது முன்னோர்கள் சொத்து ஒதுக்கி வைத்திருந்தார்கள். அந்த சொத்தின் வருமானத்தின் நெசவாளர் சமுதாய மக்களுக்காக பயன்படுத்தி வந்திருந்தார்கள். பின்பு அந்த சொத்துக்களை முத்துஅழகு என்பவர் எங்கள் முன்னோர்களிடமிருந்து அபகரித்து விட்டார்கள். பின்பு அவர்கள் அந்த சொத்திலிருந்து வரும் வருமானங்களை நெசவாளர் சமுதாய மக்களின் படிப்பிற்காக பயன்படுத்தவில்லை. சொத்து தொடர்பான கணக்கு வழக்குகளை முத்து அழகு என்பவரிடம் நாங்கள் கேட்டோம். அதை முத்து அழகு தர மறுத்துவிட்டார். பின்பு அது தொடர்பாக தியாகராஜர் பள்ளியில் கூட்டம் போட்டோம். அப்போது முத்துஅழகு மற்றும் அவருடன் இருந்த மற்ற நபர்கள் எங்களை அடித்து தாக்கினார்கள். அப்போது எனதுஇடது கா லில் காயம் ஏற்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டது. தற்போது என்னால சரியாக நடக்க முடியவில்லை. பின்பு இது தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்து மருத்துவமனை சென்றோம். அந்த சம்பவம் தொடர்பாக காவலர்கள் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது வழக்கு தொடர்பாக சுந்தரமகாலிங்கம் என்பவர் மனு செய்துள்ளார்.

சி.ஆர்.எம்.பி. 2507/2022

திரு.ராஜாமணி , த.பெ.கோவிந்தன்

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 24.3.2023

**சத்திய பிரமாண வாக்குமூலம் –**

நான் திருவில்லிபுத்தூரில் மாயாண்டிபட்டியில் குடியிருந்து நெசவு தொழில் செய்து வருகிறேன். எங்கள் முன்னோர்கள் நெசவாளர் சமுதாய மக்களின் படிப்பிற்காக சொத்து ஒதுக்கி வைத்திருந்தார்கள். அந்த சொத்தின் வருமானத்தில் அவர்களது படிப்பிற்காக செலவளித்து வந்துள்ளார்கள். பின்பு அந்த சொ்த்தை சில நபர்கள் அபகரித்துவிட்டார்கள். அபகரித்த பின்பு அந்த சொத்தின் வருமானத்தை நெசவாளர் சமுதாய மக்களின் படிப்பிற்காக செலவு செய்யவில்லை. அவர்களிடம் சொத்து தொடர்பாக மற்றும் அதன் வருமானம் தொடர்பாக கணக்குகள் கேட்டோம் அதை வழங்க மறுத்துவிட்டார்கள். பின்பு அது தொடர்பாக தியாகராஜர் பள்ளியில் கூட்டம் போடும்போது கூட்டத்தில் இது தொடர்பாக அவர்களிடம் கேட்டபோது அவர்கள் எங்களை அடித்து துரத்திவிட்டார்கள். பின்பு நாங்கள் திருவில்லிபுத்தர் நகர் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்துவிட்டு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அந்த சம்பவம் தொடர்பாக காவலர்கள் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது வழக்கு தொடர்பாக சுந்தரமகாலிங்கம் என்பவர் மனு செய்துள்ளார்.

சி.ஆர்.எம்.பி. 2507/2022

திரு.கோவிந்தன் , த.பெ.மாடசாமி

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 24.3.2023

**சத்திய பிரமாண வாக்குமூலம் –**

நான் திருவில்லிபுத்தூரில் மாயாண்டிபட்டியில் குடியிருந்து நெசவு தொழில் செய்து வருகிறேன். எங்கள் முன்னோர்கள் நெசவாளர் சமுதாய மக்களுக்கு மற்றும் அவர்களது முன்னேற்றத்திற்காகவும், அவர்களது படிப்புக்காகவும், சொத்துக்கள் ஒதுக்கி வைத்திருந்தார்கள். அந்த சொத்திலிருந்து வரும் வருமானத்தை நெசவாளர் சமுதாய மக்களின் முன்னேற்றத்திற்காக உபயோகித்து வந்திருந்தார்கள். பின்பு முத்துஅழகு மற்றம் அவருடன் உள்ள மற்ற நபர்கள் எங்கள் முன்னோர்களிடமிருந்து அந்த சொத்துக்களை கைப்பற்றி அதில் இருந்து வரும் வருமானங்களை நெசவாளர் சமுதாய மக்கள் படிப்பிற்காக உபயோகிக்கவில்லை. அது தொடர்பாக தியாகராஜர் பள்ளியில் நாங்கள் கூட்டம் போடும்போது முத்துஅழகு என்பவர் எங்களை அடித்து , துரத்திவிட்டார். பின்பு நாங்கள் திருவில்லிபுத்தர் நகர் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்துவிட்டு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அந்த சம்பவம் தொடர்பாக காவலர்கள் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது வழக்கு தொடர்பாக சுந்தரமகாலிங்கம் என்பவர் மனு செய்துள்ளார்.

பின்பு நெசவாளர் சமுதாய நபர்களின் படிப்பிற்காக எந்த ஒரு பணமும் அல்லது சொத்திலிருந்து வரும் வருமானத்தையும், முத்துஅழகு மற்றும் அவருடன் உள்ள மற்ற நபர்கள் ஒதுக்கவில்லை. அதனால் நெசவாளர் சமுதாய நபர்களின் படிப்பு , முழுமையடையவில்லை. நாங்கள் முத்துஅழகரிடம் சொத்து தொடர்பான கணக்கு கேட்டதற்காக பிரச்சினை செய்துள்ளார்.

சி.ஆர்.எம்.பி. 2507/2022

திரு.காளிமுத்து த.பெ.காமாட்சி

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 24.3.2023

**சத்திய பிரமாண வாக்குமூலம் –**

நான் திருவில்லிபுத்தூரில் மாயாண்டிபட்டியில் குடியிருந்து நெசவு தொழில் செய்து வருகிறேன். எங்கள் முன்னோர்கள் நெசவாளர் மக்களுக்காகவும் , அவர்களது முன்னேற்றத்திற்காகவும் சொத்து சேர்த்து வைத்திருந்தார்கள். அந்த சொத்தின் வருமானத்தை அவர்களின் முன்னேற்றத்திற்காக உபயோகித்து வந்து கொண்டிருந்தார்கள். முத்துஅழகு என்பவர் எங்களது முன்னோர்களிடமிருந்து ஒதுக்கப்பட்டுள்ள சொத்தை முத்துஅழகு என்பவர் சொத்தை பராமரிப்பேன் என்று சொல்லி கைப்பற்றியுள்ளார். முத்துஅழகு என்பவர் அந்த சொத்தை கைப்பற்றிய பின்பு நெசவாளர் மக்களுக்காக பயன்படுத்தவில்லை. மேலும் அதில் இருந்து வரும் வருமானங்களை நெசவாளர் மக்களின் முன்னேற்றத்திற்காக அவர் பயன்படுத்தவில்லை. முத்துஅழகு–யிடம் சொத்து தொடர்பாக வரவு செலவுகளை அவரிடம் நான் மற்றும் எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கேட்டோம். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு அதைப்பற்றி கேட்பதற்காக முத்துஅழகரிடம் தியாகராஜர் பள்ளிக்கு செல்லும் போது அவர் பள்ளியில் வைத்து எங்களுக்கு வரவு, செலவு கணக்குகளை காட்டாமல் எங்களை அடித்து , துரத்திவிட்டார்.

பின்பு நாங்கள் திருவில்லிபுத்தர் நகர் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்துவிட்டு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அந்த சம்பவம் தொடர்பாக காவலர்கள் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது வழக்கு தொடர்பாக சுந்தரமகாலிங்கம் என்பவர் மனு செய்துள்ளார்.